**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.290/2023 வா.சா.2 கதிர்வேல்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 16.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்து இருந்தார் என்றால் ஆழ்துளை கிணறு தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து உள்ளார் . வாதி எனக்கு என்ன உறவு என்றால் அவர் என் பெரியம்மா மகன் ஆவார். என் சாட்சிய வாக்குமூலத்தில விவரங்களை யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன்.

2) வாதியின் சொத்து எந்த கிராமத்தில் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் நல்லட்டிபாளையம் பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டது. சென்றாம்பாளையம் கிராமத்தில் உள்ளது. புல எண் 133/2 ஆகும். வழக்கு ஆழ்துளை கிணறு தேவராயபுரம் கிராம புல எண் 339/1ல் அமைந்து உள்ளது என்றால் புல எண் தெரியவில்லை. வழக்கு ஆழ்துளை கிணறு எந்த கிராமத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. வழக்கு ஆழ்துளை கிணறு எங்கு உள்ளது என்றோ வழக்கு விவரங்கள் பற்றியோ தெரியாமல் வாதிக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சியத்தில் கூறியவாறு பிரதிவாதிகள் வாதியின் சுவாதீனத்தை ஒருபோதும் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச.ஶ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி